# நகராட்சி நிர்வாக அறிக்கை
# 2009–2010
# புளியங்குடி நகராட்சி

## புளியங்குடி நகராட்சி
## 2009–2010 ஆண்டின் நிர்வாக அறிக்கை

1. <u>அமைப்பும் மேலாட்சியும்</u>

இந்நகர் தமிழக அரசின் 22.5.98 ம் தேதிய 85ம் எண் ஆணைப்படி 22.5.98 ம் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக மாற்றப்பட்டு இன்றுவரை அதே நிலையில் இருந்து வருகிறது.

இந்நகராட்சி 1) புளியங்குடி 2) மேலப்புளியங்குடி 3) திருமலை நாயக்கன் புதுக்குடி 4) சிந்தாமணி ஆகிய நான்கு வருவாய் கிராமங்கள் முழுப்பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 21.3 சதுர மைல் அலலது 55.16 சதுர கிலோ மீட்டராகும்.

**<u>அ) மன்றம்</u>**

இந்நகராட்சி தமிழக அரசின் 2.7.96 ம் தேதிய சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை எண்.38128/96/எல்3–3ன் படி 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டது . இதில் அரச ஆணை 196/27.8.96ன் படி 11 வார்டுகள் பெண்களுக்காகவும், 5 வார்டுகள் ஷெட்யூல் வகுப்பினர்களுக்காகவும் மீதமுள்ள 17 வார்டுகள் பொது இடங்களாகவும் நிர்ணயம் செய்யப்பட்டது . நகர்மன்றத்தலைவர் பதவி பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. அதன்படி 18.10.2001ம் தேதியில் நகர்மன்ற தேர்தல் நடத்தப்பட்டு நகர்மன்றத்தலைவரும் உறுப்பினர்களும் 25.10.2001ம் தேதி பதவியேற்றனர். திருமதி.கு.தேவகி குழந்தைவேல் அவர்கள் 25.10.2001ம் தேதி முதல் 14.10.2006 வரை நகர்மன்றத்தலைவராக பணியாற்றினார். . அதன்பின் 31.10.2001 ம் தேதியன்று திரு.மு.அலாவுதீன் அவர்கள் துணைத் தலைவராக பொறுப்பேற்றார். 2006 தேர்தல் அறிவிப்பின்படி நகர்மன்றத் தலைவர் பதவி ஆண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 15.10.06 –ம் தேதியில் நகர்மன்றத் தேர்தல் நடைபெற்று நகர்மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்றனர்.25.10.06 முதல் திரு.சா.துரையப்பா அவர்கள் நகர்மன்ற தலைவராகவும் 28.10.06 அன்று திரு.மு.முகம்மது இஸ்மாயில் அவர்கள் நகர்மன்ற துணைத்தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளனர். 25.10.2006ம் தேதி முதல் இந்நகர்மன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட 33 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. 2001ம் ஆண்டு மக்கள் ஜனத்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 60142 ஆகும் . தற்போதைய ஜனத்தொகை 2009ம் ஆண்டின் மக்கள் தொகை 76000 ஆகும்.

**ஆ) குழுக்கள்**

1) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு 1920ம் ஆண்டில் தமிழ் நாடு நகராட்சி சட்டப்பிரிவு 23 ‘அ’ ன்படி இந்நகர்மன்றத்திற்கு சொத்துவரி மற்றும் தொழில்வரி ஆகியவற்றின்பேரில் வரி செலுத்துபவர்களால் மேல்முறையீடு செய்யும் மனுக்களை பரிசீலனை செய்ய நகர்மன்றம் 4 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு வரி மேல்முறையீட்டுக்குழுவை ஏற்படுத்தியுள்ளது.

2) இவை போக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட 1920ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்பிரிவு 73 மற்றும் 68 (2) ன்படி மேலும் கீழ்க்கண்ட சட்டபூர்வ குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| | குழுவின் பெயர் | உறுப்னர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| அ. | நியமனக்குழு | 1 |
| ஆ. | ஒப்பந்தக்குழு | 1 |
| இ. | உள்ளூர்த்திட்டக்குழுமம் | 33 |

அறிக்கையாண்டில் மன்றக்கூட்டங்கள் அனைத்தும் மாதந்தோறும் அம்மாத இறுதி வாரத்தில் நடைபெற்றது . அவசரமாக பொருட்கள் முடிவு செய்யப்பட வேண்டிய காலத்தில் அவசரக்கூட்டங்களும் நடத்தப்பட்டன. அறிக்கையாண்டில் நடைபெற்ற மன்றத்தின் சாதாரண, அவசர, விசேச கூட்டங்கள் மற்றும் குழுக்களின் கூட்டங்கள் மற்றும் அதன் பார்வைக்கு வைக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட பொருட்கள் பின்வருமாறு :–

| வ. எண் | விபரம் | நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | வைக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை | விடப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | **<u>நகர்மன்றம்</u>** | | | | |
| | சாதாரணக்கூட்டம் | 5 | 165 | 165 | –– |
| | அவசரக்கூட்டம் | 9 | 239 | 233 | 6 |
| | விசேடக்கூட்டம் | 3 | 3 | 3 | –– |
| 2. | நியமனக்குழு | 1 | 1 | 1 | –– |
| 3. | ஒப்பந்தக்குழு | –– | –– | –– | –– |
| 4. | உள்ளூர் திட்டக் குழுமம் | | –– | –– | –– |

பொதுவாக மன்றம் மற்றும் குழுக்களின் முன் வைக்கப்பட்ட பொருட்களை முடிவு செய்வதில் எவ்வித சிரமமும் ஏற்படவில்லை. மேலும் மன்றக்கூட்டங்கள் நடத்துவதற்காக அரசினரின் 22.9.38ம் தேதிய உள்ளாட்சித்துறை 3807ம் எண் ஆணையில் கொடுத்துள்ள மாதிரி விதிகளையும், அவ்வப்போது அரசினர் அறிவித்த அறிவுரைகளையும் நகராட்சிகளின் சட்டம் ஷெட்யூல் 3ல் கொடுத்துள்ள விதிகளையும் பின்பற்றி வந்தன.

**<u>2.. இயக்கும் அதிகாரிகள்</u>**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு நகராட்சி ஆணையராக பணிபுரிந்து வந்தார்கள்

| | | |
|---|---|---|
| ஆணையாளர் (பொ) | திரு.எம்.எஸ்.முகம்மது ஷரிப் நகராட்சி பொறியாளர் | 01.04.2009 முதல் 22..07.2009 |
| ஆணையாளர் | திரு.வெ.வெங்கடாச்சலம் | 23.7.2009 முதல் 30.9.2009 |
| ஆணையாளர் | திரு.ம.செந்தில் முருகன் | 14.10.2009 முதல் நாளது தேதி |

**<u>3. மேலாண்மை</u>**

அறிக்கையாண்டில் நகராட்சி பணியாளர்களின் மொத்த ஊதிய செலவு மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் மொத்த செலவு ரூ.4280636/– அதே வேளையில் அறிக்கையாண்டில் நகராட்சியின் சாதாரண வருமானம் மானியம் உட்பட ரூ.3875567/–

நகர்மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் சம்பந்தமான விதிகள் தவறாது பின்பற்றி வரப்பட்டது. அறிக்கையாண்டில் இதை கையாளுவதில் சிரமங்கள் எதுவும் ஏற்படவில்லை.

வழக்கம்போல் இந்த ஆண்டும் நகராட்சிக்கு தேவையான பணமதிப்பு உரிய நமுனாக்களையும், புத்தகங்களையும், பதிவேடுகளையும் திருநெல்வேலி மற்றும் கோவில்பட்டி கூட்டுறவு அச்சங்களிலிருந்து பெறப்பட்டது.

இந்நகரின் அநேக தெருக்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் இருந்தாலும் சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வந்தன.

## 2009–2010 ஆண்டில் நடைபெற்ற வேலைகள்

இந்நகர்மன்றத்தால் 2009–2010ம் ஆண்டில் கீழ்க்கண்ட வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| | **பொது நிதி** | |
| 1 | பனிரெண்டாவது நிதிக்குழுத் திட்டம் – 2009–2010.<br>கெங்கையம்மன் கோவில் தெருவில் தார்தளம் அமைத்தல் | 8.40 |
| 2 | சிதம்பரம் வடக்குத் தெருவில் தார்தளம் அமைத்தல் | 2.75 |
| 3 | புதிய டம்பர் பியேசர் பின் வாங்குதல் | 12.10 |
| 4 | கணிணி மற்றும் மின் பயன்பாடு | 6.00 |
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்–2009–10** | |
| 1 | அருந்ததியர் சுடுகாடு செல்லும் பாதைக்கு தார் தளம் அமைத்தல் | 5.00 |
| 2 | சிதம்பரப்பேரி ஓடை (அம்மன் நகர்) சிமெண்ட் தளம் அமைத்தல் | 4.00 |
| 3 | சிதம்பரப்பேரி ஓடை ( பிஸ்மி நகர்) சிமெண்ட் தளம் அமைத்தல் | 4.00 |
| 4 | வார்டு 33ல் அங்கன் வாடி சத்துணவு மையம் அமைத்தல் | 2.00 |
| 5 | சோலைமலை தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 6 | ஊர்க்காலப்போத்தி கோவில் தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 7 | பகவதியம்மன் கோவில் தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 8 | சுள்ளாக்கரை தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 9 | புதுமனை 1ம் தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 10 | பிச்சாண்டி 3வது கீழத்தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 11 | பிச்சாண்டி1வது தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 12 | இந்திரகாலணி மேல்பகுதி ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 13 | இந்திரகாலணி கீழ்பகுதி ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 4 | கே.டி.எம்.அகமது இப்ராகிம் தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 15 | காலாடி தெற்கு தெரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 |
| 16 | சுப்பிரமணியசாமி கோவில் சன்னதி தெரு தரைமட்ட நீர்தோக்கத் தொட்டி மற்றும் மின் மோட்டார் அமைத்தல் | 0.65 |
| 17 | மேலதைக்கா தெரு தரைமட்ட நீர்தோக்கத் தொட்டி மற்றும் மின் மோட்டார் அமைத்தல் | 0.65 |
| 18 | முத்து தெரு தரைமட்ட நீர்தோக்கத் தொட்டி மற்றும் மின் மோட்டார் அமைத்தல் | 0.65 |
| 19 | கெங்கையம்மன் கோவில் தெரு தரைமட்ட நீர்தோக்கத் தொட்டி மற்றும் மின் மோட்டார் அமைத்தல் | 0.65 |
| 20 | சுந்தர விநாயகர் கோவில்தெரு தரைமட்ட நீர்தோக்கத் தொட்டி மற்றும் மின் மோட்டார் அமைத்தல் | 0.65 |
| 21 | காந்தி பாஜர் வடக்கு தெரு தரைமட்ட நீர்தோக்கத் தொட்டி மற்றும் மின் | 1.00 |

| | | |
|---|---|---|
| | மோட்டார் அமைத்தல் | |
| 22 | சத்யா நகர் சிமெண்ட் தளம் அமைத்தல் | 0.75 |
| 23 | நகராட்சி உரக்கிடங்கிற்கு அணுகு சாலை அமைத்தல். | 17.50 |
| 24 | வார்டு 8ல் அங்கன் வாடி சத்துணவு மையம் அமைத்தல் | 2.00 |
| 25 | வார்டு 5ல் அங்கன் வாடி சத்துணவு மையம் அமைத்தல் | 2.00 |
| 26 | வார்டு7ல் அங்கன் வாடி சத்துணவு மையம் அமைத்தல் | 2.00 |

**4) தங்கும் விடுதிகள்**

இந்நகர்மன்றத்தினரால் தங்கும் விடுதியோ அல்லது பயணிகள் விடுதியோ பராமரிக்கப்படவில்லை. மேலும் பெரிய அளவில் தங்கும் விடுதிகள் தனியாராலும் பராமரிக்கப்படவில்லை.

**5) பொறிகளும் கருவிகளும்**

கணிணி சம்பந்தமான பொருட்கள் ஏதும் பெறப்பட்வில்லை

**6) விளக்கு வசதிகள்**

அறிக்கையாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலுள்ள மின்விளக்குகள் விபரம் பின்வருமாறு

| வ.எண். | விபரம் | ஆரம்பத்தில் இருந்தது | புதிதாகவும் மாற்றம் செய்தது | இறுதியில் |
|---|---|---|---|---|
| 1, | 100 வாட்ஸ் சாதா விளக்கு | – | – | – |
| 2. | 80 | – | – | – |
| 3. | 60 | – | – | – |
| 4. | 40 | – | – | – |
| 5. | 125 வாட்ஸ் பாதரஸ ஆவிவிளக்கு | 34 | – | 34 |
| 6. | சோடியம் ஆவிவிளக்கு | 175 | – | 175 |
| 7. | 40 வாட்ஸ் மின்குழல் விளக்கு | 1145 | – | 1145 |
| | **மொத்தம்** | **1349** | **–** | **1354** |

அறிக்கையாண்டில் விளக்குவரி மூலம் வரவு ரூ.98252/– ஆகும். மின்விளக்குகள் பராமரிப்பு சிப்பந்திகள் ஊதியம், மின் உபகரணங்கள் வாங்கியது மற்றும் மின்கட்டணம் செலுத்திய வகைக்கு செலவு ரூ.154105/–

**கல்வி வசதிகள்**

அறிக்கையாண்டில் நகர்மன்றத்தினரால் புதிய பள்ளிகள் எதுவும் ஆரம்பிக்கவில்லை. ஏற்கனவே நகராட்சிப் பொறுப்பிலிருந்து வந்த ஒரு உயர் ஆரம்பப்பள்ளியும் 7 ஆரம்பப்பள்ளிகளும் 1.4.90 முதல் கல்வித்துறையிடம்ஒப்படைக்கப்பட்டது.

கீழ்க்கண்டவாறு  இந்நகராட்சியில் பள்ளிச்சத்துணவு மையங்கள் உள்ளன.

1. சிந்தாமணி
2. முப்புடாதியம்மன்கோவில்தெரு
3. வேலாயுதக்குடும்பன் தெரு
4. மெயின்பஜார்
5. பங்களாத்தெரு
6. தைக்காதெரு
7. பழைய அஞ்சல்தெரு
8. சுந்தரசீனியம்மாள் பள்ளி

பள்ளிக்குழந்தைகள் மையங்கள்  தினசரி உணவு உண்போரின் சராசரி எண்ணிக்கை 589 ஆகும்,

**<u>மேல்நிலைக்கல்வியும், நூல்நிலையங்களும்</u>**

நகராட்சி பகுதியில் மேல்நிலைப்பள்ளிகள் 7ம், உயர்நிலைப்பள்ளிகள் 31, மெட்ரிகுலேசன் பள்ளி 4ம், நடுநிலைப்பள்ளிகள் 10ம் மற்றும் ஆரம்பப்பள்ளிகள் 14ம் உள்ளன. அவைகளில் தமிழக அரசின் சார்பில் ஆண்களுக்கான உயர்நிலைப்பள்ளி ஒன்றும்நடத்தப்படுகின்றன,  நகராட்சியின் சார்பில் பொது நூலகங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.  அலுவலக வாசக சாலை மட்டும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி வாசக சாலைக்கு அறிக்கையாண்டில் பத்திரிக்கைகள் வாங்கிய வகையில் ரூ.5479/— ஆகும்.  நகரில் மாவட்ட பொது நூலக ஆணைக்குழுவினரால் ஒரு நூல்நிலையம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>வானொலி மற்றும் தொலைக்காட்சி வசதிகள்</u>**

பொதுமக்களின் சௌகரியத்தையும் ,பொழுது போக்கையும் முன்னிட்டு நகரில் டி.என்.புதுக்குடி செங்குந்தர் சங்கம், நாடார்ஊர்  பொதுமடம், கதர்கொடி மடம், சிந்தாமணி நாடார் மடம், அய்யாபுரம்  ஊர் பொதுமடம் ஆகிய இடங்களில் வானொலி பெட்டிகள் அந்தந்த சமூகத்தின் சார்பில் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அரசிடமிருந்து பெறப்பட்டுள்ள இரண்டு தொலைக்காட்சி பெட்டிகள் நகரின் புளியங்குடி பகுதியில் ஒன்றும் சிந்தாமணி பகுதியில் ஒன்றும் பொதுமக்களின் பயனுக்காக வைக்கப்பட்டுள்ளன.

**<u>பொது நலம்</u>**

**<u>நோய் தடுப்பு மருந்து</u>**

இந்நகராட்சியின் நோய் தடுப்பு மருந்துகள் அவ்வப்போது மாவட்ட சுகாதார அதிகாரியிடமிருந்து பெறப்பட்டு இருப்பில் வைக்கப்பட்டு, பிரதி புதன்கிழமைதோறும் குழந்தைகளுக்கு நோய் தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு  குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இது தவிர தீவிர போலியோ ஒழிப்பு திட்டத்தின் கீழ்  அறிக்கையாண்டில் 5 வயதுக்குட்பட்ட  குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

இந்நகராட்சியின்பராமரிப்பில் ஆயுர்வேத சித்த மருந்தகங்கள் எதுவுமில்லை.

**பொது சுகாதாரம்**

இந்நகரின் பொது சுகாதாரப்பணிகள் மேற்பார்வையிட துப்புரவு அலுவலர் ஒருவரும் துப்புரவு ஆய்வர்கள் இருவரும் பணியாற்றி வருகின்றனர். அதுபோக மொத்தம் 83 துப்புரவுப்பணியாளர்கள் பணிபுரிகின்றனர். மேற்படி பணியாளர்களைக் கொண்டு நகரிலுள்ள குப்பை கூழங்களை தொட்டிகளில் சேகரித்து அதனை லாரி மூலமாக அப்புறப்படுத்தி கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகின்றது. மேலும் தெருக்களில் உள்ள வாறுகால்களை சுத்தப்படுத்தும் பணியும் மேற்படி பணியாளர்களை கொண்டு செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளுக்கு கீழ்க்கண்ட வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| பெரிய லாரி | 1 |
| மினிலாரி | 4 |
| ஆட்டோ | 2 |
| தள்ளுவண்டி | 82 |

ஆறிக்கையாண்டில் இந்நகராட்சியின் மொத்த குடியிருப்புகள் 19364. அவற்றில் 8125 குடியிருப்புகளில் நவீன கழிப்பறைகள் மற்றும் குறைந்த செலவிலான நவீன கழிப்பறைகள் உள்ளன. மீதமுள்ள குடியிருப்புகளில் உள்ளவர்கள் இந்நகரில் குடியிருப்பு பகுதிகளில் தவிர எஞ்சியுள்ள வயல் வெளிகளை கழிவறையாக பயன்படுத்தி வருகின்றனர். இந்நகரில் சுகாதார வளாகம் இரண்டு மற்றும் கட்டணக் கழிப்பிடங்கள் இரண்டும் உள்ளது.

**<u>உரக்கிடங்கு</u>**

உரம் தயாரிப்பதற்கு டி.என்.புதுக்குடி கிராமத்தில் 5.06 ஏக்கர் இடம் விலைக்கு வாங்கப்பட்டு உரம் தயாரிப்பற்கு ஐடிஎஸ்எம்டி திட்டத்தின் கீழ் தேவையான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

உரம் தயாரிப்புக்கு செலவு ஏதும் செய்யப்படவில்லை. உரக்கிடங்கு அபிவிருத்திக்காக இவ்வாண்டில் , தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அனுகுசாலைஅமைத்தல் மற்றும் வேலி அமைத்தல் உட்பட அபிவிருத்தி பணிகள் செய்யப்பட்டுள்ளன..

**<u>உணவு கலப்படம்</u>**

உணவு கலப்படத்தடுப்பு சட்டத்தின்கீழ் வரக்கூடிய அனைத்து விற்பனை நிலையங்களையும் பார்வையிட்டுதமிழ்நாடு நகராட்சி சட்டப்பிரிவு 249—ன் உணவு கலப்பட தடுப்பு உரிமையாணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அறிக்கையாண்டில் ரூ.10168/— உரிமையாணை கட்டணம் பெறப்பட்டுள்ளது. இந்நகராட்சி துப்புரவு அலுவலர், உணவு ஆய்வர் பணியையும் சேர்த்து கவனித்துவருகிறார். அறிக்கை ஆண்டில் உள்ளூர் நல அலுவலர் இல்லாததால் உணவு மாதிரிகள் எடுக்கப்படவில்லை.

**<u>அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமம்</u>**

பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டு அறிக்கையாண்டில் அபாயகரமானதும் அருவருக்கத்தக்க தொழில்கள் நடத்துவதற்கான நிறவனங்கள் துப்புரவு ஆய்வர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அரசு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 29.7.76 ம் நாள் குறிப்பாணை எண்.79216/எம்2/76—ன்படி 1.5.76 முதல் ஏற்படுத்தப்பட்ட உபவிதிகளின்படி உரிய நிபந்தனைகளுடன் கூடிய உரிமையாணை வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நகராட்சிக்கு அறிக்கையாண்டில் ரூ.102669/— வரவு பெறப்பட்டுள்ளது.

**சிறுசேமிப்பு**

இந்நகராட்சிக்கு இந்த வருடம் சிறுசேமிப்பு குறியீடு ரூ.70/– லட்சம் நிர்ணயிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் ரூ.70/– லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது,

**காட்சிகளும் திருவிழாக்களும்**

இந்நகரில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட திருவிழா எதுவுமில்லை. அவ்வப்போது நடைபெறும் சாதாரண திருவிழாக்களின்போது துப்புரவு பணிகள் நல்லமுறையில் செய்யப்பட்டது.

**தண்ணீர் விநியோகம்**

இந்நகரின் மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள கோட்ட மலையாற்றிலிருந்து நேரடியாக குடிநீர் பெறப்பட்டும்தாமிரபரணி கூட்டு குடிநீர்திட்டம் மூலமும் குடிநீர் பெறப்பட்டும் ஐந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் ஏற்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் 9.1.1974ல் துவக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் இவ்வாண்டு வரை 7272 குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தண்ணீர்கட்டணம் ரூ.4429876/– வரவாகியுள்ளது.

**சாக்கடை வசதி**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் எதுவுமில்லை. அநேக பகுதிகளில் திறந்தவெளி சாக்கடைகள் தாங்கி சுவர்களை கொண்டு கட்டப்பட்டு உள்ளது. இவை இல்லாத பகுதிகளில் கழிவுநீர் செல்லக்கூடிய அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதாள சாக்கடைத் திட்டம் இந்நகரில் நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**தீயணைப்பு நிலையம்**

அரசினால் இந்நகரில் தீயணைப்பு நிலையம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

**போக்குவரத்து**

இந்நகருக்குள் அரசுத்துறை மற்றும் தனியார்துறைகளின் பேரூந்துகள் போதுமான அளவில் இயக்கப்பட்டு வருகின்றன.

**இதர வருவாய் இனங்கள்**

இந்நகராட்சியால் ஈட்டப்படும் இதர வருவாய் இனங்கள் கீழ்க்கண்டவாறு

| வருடம் | தினசரி சந்தை | வண்டி நிலையம் | பேரூந்து நிலையம்கடைகள் | ஆடு அறுப்பு மற்றும் கசாப்புக்கடைகள் |
|---|---|---|---|---|
| 2006–2007 | 651000 | – | 150190 | 67950 |
| 2007–2008 | 720100 | – | 502202 | 70050 |
| 2008–2009 | 729200 | – | 678014 | 82720 |

## தினசரி சந்தை

இந்நகராட்சி ஒரு தினசரி சந்தையை பராமரித்து வருகிறது. இந்த ஆண்டும் மேற்படி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஏலத்திற்கு விடப்பட்டு ரூ.729200/– வசூல் செய்யப்பட்டுள்ளது. தினசரி சந்தை இடத்தை விலைக்கு வாங்கப்பெற்ற கடன் தொகை கடைகள் கட்டுவதற்கு வாங்கப்பட்ட கடன் தொகை பூராவும் திரும்ப செலுத்தப்பட்டுவிட்டது. நகராட்சிப் பகுதியில் தனியார்துறையினரால் நடத்தப்படும் சந்தைகள் எதுவுமில்லை. மேலும் நகராட்சியாயோ அல்லது தனியாரலோ வண்டி நிலையங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## பேரூந்து நிலையம்

புளியங்குடி பகுதியிலும், சிந்தாமணி பகுதியிலும் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் பேரூந்து நிலையங்கள் தலா ரூ.15.00 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.
புளியங்குடி பகுதியில் உள்ள பேரூந்து நிலையத்திற்கு பெயர் வைப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் இரு சமூகத்தினரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் கட்டணம் வசூலிக்கும் உரிமை ஏலம் விடப்படவில்லை. நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மூலம் பேருந்து கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பேரூந்து நிலையத்திற்குள் பேரூந்துகள் காவல்துறையின் உதவியினால் வந்து செல்வதினால் நிதியாண்டில் வரவு ரூ.154655/– ஆகும்.

## பூங்கா பராமரிப்பு

நகராட்சியால் பூங்காக்கள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. நீர்த்தேக்க நிலையங்களிலும் இதர சாலையோரங்களிலும் பராமரிக்கப்படும் பலன்தரத்தக்க மரங்களின் மூலமாக நிதியாண்டில் ஏதும் வரவு இல்லை

## நகரமைப்பு

நகர்மன்றத்தால் நகரமைப்புக்குழு எதுவும் அமைக்கப்படவில்லை. ஆனால் மன்றம் நகரினை அரசின் நகரமைப்புச் சட்டத்தின்கீழ் விரிவான ஆய்வு செய்யக் கேட்டுக் கொண்டதின்பேரில் அரசு 26.12.1970ம் தேதிய அரசு ஆணை எண்.2696ல் விரிவான புல ஆய்வு அனுமதியளித்துள்ளது.

இந்நகராட்சியில் விரிவு அபிவிருத்தி திட்டங்கள் மொத்தம் 5 எண்ணங்கள் உள்ளன. அதில் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்2–க்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின்14.6.96ம் தேதிய ந.க.எண்.8083/96/டிபி3–ன்படி திட்டத்திற்கு இணக்கம் மறுக்கப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 மற்றும் 5 ஆகியவை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் 4 இறுதி ஒப்புதல் ந.க.எண்.8313/96/பி2. நாள்.21.4.1996ன்படி வழங்கப்பட்டு மாநில அரசிதழ் வெளியீடு செய்ய வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.4ஐ இணக்கத்திற்க சமர்ப்பிக்கப்பட்டு அதன்பேரில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.5880/2000/DP2 நாள்.22.6.2001–ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி இணக்கம் அளிக்கப்பட்ட விபரம் குறித்து மாவட்ட அரசிதழ் மற்றும் மாநில அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் புளியங்குடி முழுமைத்திட்டம் அரசு ஆணை எண்.353. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 18.8.99ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின்பேரில் தமிழ்நாடு அரசிதழ் பகுதி VI sec 1 பக்கம் 248 நாள் 21.6.2000 த்தில் விளம்பரம் செய்யப்பட்டு 18.4.2001ல் மறு விளம்பரமும் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக ந.க.3456/99 நாள் :31.3.04 கடிதத்தில் முழுமைத் திட்டத்தை அரசின் இறுதி ஒப்புதலுக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது அரசானை எண் 24 நாள் : 7.2.2005ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது . நகரமைப்புப் பிரிவில் ஒரு நகரமைப்பு ஆய்வாளரும் ஒரு சங்கிலியாளர் பணியிடம் காலியாக உள்ளது.

**ஆக்கிரமிப்பு**

இந்நகராட்சிப் பகுதியில் உரிமம் வழங்கப்படாமல் ஆட்சேபனையுள்ள ஆக்கிரமிப்புகள் எதுவுமில்லை. ஆட்சேபனையுள்ள ஆக்கிரமிப்புகளுக்குரிய உரிமைக் கட்டணம் பெற்றுக்கொண்டு உரிமையாணை வழங்கப்பட்டு வருகிறது. திருவிழாக்கள் மற்றும் விசேட காலங்களில் தெருக்களிலும், தெரு ஓரங்களிலும் பந்தல்கள் போட்டுக் கொள்வதற்கு உரிமையாணை கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் நகராட்சிக்கு அறிக்கையாண்டில் ரூ.4365/ வசூலாகியுள்ளது.

**வருவாய் விபரம்**

நகர்மன்றம் இந்நகரின் சொத்துவரி விதிப்பு செய்ய அரையாண்டிற்கு 17 1/2 சதவீதம் நிர்ணயம் செய்துள்ளது. மேற்படி வரிவிதிப்பு பொதுக்காரியங்களுக்கு 4 சதவீதம் குடிநீர் வடிகால் வகைக்கு 6 1/2 சதவீதமும் சாக்கடை வகைக்கு 3சதவீதமும் விளக்கு வகைக்கு 1 1/2 சதவீதமும், கல்வி வகைக்கு 2 1/2 சதவீதமும் பிரித்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, மேற்படி வரிவிதிப்பின் மூலம் அறிக்கையாண்டில் சொத்துவரியாக ரூ.7434630/– வசூல் செய்யப்பட்டுள்ளது. நகராட்சிப் பணியாளர்களால் வசூல் செய்யப்படும் வரியினங்கள் மூலமாக 12741063/– வரவாகியுள்ளது. இதை வசூலிக்க ஏற்பட்ட செலவு இவை போக இதர வருவாய் மற்றும் அரசு மான்யங்கள் மூலமாக நகராட்சிக்கு அறிக்கையாண்டில் வரவாகியுள்ளது. பொதுமக்களிடமிருந்து வசூல் செய்யப்படும் சொத்துவரி, தொழல்வரி, வரி வகையில் ரூ.6405903/– அறிக்கையாண்டில் இந்நகரின் மொத்த ஜனத்தொகை 60142. இதன்படி நபர் ஒன்றுக்கு வரித்தொகையாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.105/– ஆக வசூலிக்கப்படுகிறது.

அறிக்கையாண்டில் கேட்பு வசூல் நிலுவை விபரம் கீழே தரப்பட்டுள்ளது. ரூபாய் இலட்சத்தில்

| விபரம் | | கேட்பு | | | வசூல் | |
|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| வரியினம் | 16.67 | 43.85 | 60.52 | 2.01 | 1.01 | 3.02 |
| வரியில்லா இனங்கள் | 13.52 | 33.96 | 47.48 | 2.58 | 12.71 | 15.29 |
| **மொத்தம்** | **30.19** | **77.81** | **108.00** | **4.59** | **22.72** | **18.31** |

வரியினங்களில் வசூலிக்கத்தக்க கேட்பு தொகையில் வருவாய் உதவியாளர்களால் 97.03 சதவீதம் வசூல் செய்து முடித்துள்ளார்கள். வழக்கம்போல் இந்நகராட்சி வரியினங்கள் உரிமையாணை கட்டணங்கள், அரசின் மான்யங்கள் ஆகியவற்றினைக் கொண்டு செயல்பட்டு வந்தது. இந்நகராட்சியின் மொத்த செலவு கீழ்க்கண்டவாறு தரப்படுகிறது.

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | (–)1989617 |
| வரவு | 32457075 |
| மொத்தம் | 30467458 |
| செலவு | 28390345 |
| இறுதி இருப்பு | 2077113 |

**அறிக்கையாண்டில் வரப்பெற்ற மானியம் விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1) | பன்னிரெண்டாவது நிதிக்குழு திட்டம் 2009–10 | – | ரூ.2925000/– |
| 2) | பகுதி இரண்டு திட்டம் | – | ரூ.1080000/– |
| 3) | சட்டமன்ற உறுப்பினர் நிதி திட்டம் | – | ரூ.4780000/– |

**மூலதன செலவு விபரம்**

அறிக்கையாண்டில் நகர்மன்றம் அரசுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ. 4055812/– ஆகும். திருப்பிச் செலுத்தியது 2584225/–. எனவே இறுதியாக திருப்பி செலுத்த வேண்டிய கடன் தொகையாக ரூ. 1471587/– ஆக உள்ளது. அறிக்கை ஆண்டில் புதிய கடன் எதுவும் அரசிடமிருந்து பெறப்படவில்லை.

**முதலீடுகள்**

இந்நகராட்சியின் முதலீடு விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 76944384.00 |
| முதலீடு செய்தது | ––––– |
| மொத்தம் | 76944384.00 |
| திரும்பப்பெற்றது | – |
| நிகர மொத்தம் | 76944384.00 |

**தணிக்கை**

அறிக்கையாண்டின் துவக்கத்தில் தணிக்கைத்தடைகள் 548 ஆக இருந்தது, அவற்றில் நேர் செய்யப்பட்டவை 50 இறுதியில் நிலுவையாக மொத்தம் 498 தணிக்கைத் தடைகள் உள்ளது.

**உடமைகளும் பொறுப்புகளும்**

இந்நகராட்சியின் உடமைகளாக மொத்தம் ரூ.76725347/– அதே சமயம் நகராட்சி திருப்பி செலுத்த வேண்டிய பொறுப்புத்தொகையாக ரூ.41004020/– உள்ளது.

**பொதுக்குறிப்பு**

அறிக்கையாண்டில் வழக்கம்போல் நகராட்சி நிர்வாகம் சுமூகமான நிலைமையிலும் திருப்திகரமான முறையிலும் இருந்தன.

ஆணையாளர்
புளியங்குடி நகராட்சி

# நகராட்சி நிர்வாக அறிக்கை
# 2009–2010
# புளியங்குடி நகராட்சி